தலையங்கம்: உழவுக்கு நிந்தனை!

First Published : 18 Jul 2012 03:28:42 AM IST

Last Updated : 18 Jul 2012 03:30:50 AM IST

தேசிய மாதிரிக் களஆய்வுக் கழகம் (நேஷனல் சேம்பிள் சர்வே ஆர்கனைசேஷன்) சுமார் 893 லட்சம் விவசாயக் குடும்பங்களில் நடத்திய கணக்கெடுப்பில், 50% குடும்பத்தினர் கடனாளிகளாக இருக்கின்றனர். திரும்பச் செலுத்தாத இந்தக் கடன் நிலுவைத் தொகை தேசிய வங்கிகளில் 36%, கூட்டுறவு வங்கிகளில் 20% என்றால், தனியாரிடம் வட்டிக்கு வாங்கிய நிலுவை 26%. அதாவது தேசிய வங்கிகளைவிட அதிகமாகத் தனியாரிடம் கூடுதல்வட்டிக்குக் கடன் வாங்குகிறார்கள் என்பதும், திருப்பிக் கொடுக்க முடியாமல் திணறுகிறார்கள் என்பதும் தெரிகிறது.

மகாராஷ்டிர மாநிலத்தில் பருத்தி விவசாயத்துக்குப் பேரும் புகழும் பெற்ற விதர்பா பகுதியில், 2006-ம் ஆண்டு விவசாயிகள் பலர் தற்கொலை செய்துகொண்டபோது, மத்திய அரசும், வேளாண்மைக் கடன் கொள்கைகளும் மிகப்பெரும் விமர்சனத்துக்கு உள்ளாகின.

இந்த விவசாயிகள் வானும் மண்ணும் பொய்த்ததால் சாகவில்லை. மானுடம் பொய்த்ததால் செத்தவர்கள். விளைவித்த பருத்திக்கு உரிய விலை கிடைக்காததும், பி.டி. பருத்தி பயிரிட வேண்டிய கட்டாயச் சூழலும், உரம் மற்றும் விதைகளின் விலையும், போதுமான வேளாண் கடன் இல்லாமல் கந்துவட்டிக்கு ஏமாந்ததும்தான் இவர்களது தற்கொலைக்குக் காரணம் என்பதை அரசு, ஒரு வல்லுநர் குழு அமைத்துக் கண்டுபிடித்தது.

பிரதமர் மன்மோகன் சிங் தானே நேரில் விதர்பா சென்று நிலைமையைப் பார்த்தார். தற்கொலை செய்துகொண்டவர்களின் குடும்பங்களுக்கு அரசு ரூ.1 லட்சம் அறிவித்தது. இதில் வேடிக்கை என்னவென்றால், விவசாயிகளின் சராசரிக் கடன்தொகை ரூ. 27,000 தான்! இந்தத் தொகை கிடைத்திருந்தால் அந்த விவசாயி தற்கொலை செய்துகொண்டிருக்க மாட்டார்!

தன் நிலத்தில், விளைந்ததில் விதைகள் எடுத்த நிலைமை மாறி, விதைகளைப் பன்னாட்டு நிறுவனங்களிடம் வாங்க வேண்டிய சூழல் ஏற்பட்டதால், ஒரு ஏக்கருக்கு ரூ.4,000 வரை விதைக்காகச் செலவிட நேர்ந்தது. தன் சூழல் சார்ந்த இயற்கை உரங்களைத் தவிர்த்து, ரசாயன உரங்களுக்கு மாற வேண்டும் என்று விவசாயிக்கு அரசு மூளைச்சலவை செய்தபோது, அதற்கான செலவும் கூடியது. இதனால்தான் விவசாயி கடன் வாங்க நேரிட்டது.

சொந்த விதையை, சூழல் சார்ந்த உரத்தை நம்பியிருந்தபோது, ஓராண்டு விவசாயம் பொய்த்துப்போனாலும் வாழ்க்கை நடத்த முடிந்த விவசாயிக்கு, கடன் வாங்கி விவசாயம் செய்ய நேர்ந்தபோது, விளைச்சல் பாதித்ததால், இரண்டு சுமைகளைச் சுமக்க நேரிட்டது. வாழ்க்கையின் நெருக்கடியைச் சமாளிக்க முடியாமல் பலர் தற்கொலை செய்துகொண்டார்கள்.

இந்தியாவுக்கு விதர்பா உணர்த்திய நிலைமை இப்போது மாறிவிட்டதா என்றால் இல்லை. தேசிய குற்ற ஆவணக் காப்பகத் தகவலின்படி இந்தியாவில் 2009-ம் ஆண்டில் மட்டும் 17,368 விவசாயிகள் இறந்திருக்கிறார்கள்.

உண்மையான எண்ணிக்கை இதைவிட அதிகம் எனப்படுகிறது. ஏனென்றால், விவசாயக் கடன் பிரச்னையால் ஒருவர் தற்கொலை செய்துகொண்டால் பலநேரங்களில் பதிவு செய்யப்படுவதேயில்லை.

கடந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட வேளாண் கடன் ரூ. 5,75,000 கோடி! இது சென்ற நிதிநிலை அறிக்கையைக் காட்டிலும் ரூ. 1,00,000 கோடி அதிகம்! இந்த அளவுக்குக் கடன் கொடுக்கப்படுகிறது. ஒவ்வோராண்டும் விவசாயக் கடனுக்கு வட்டி தள்ளுபடி அறிவிக்கப்படுகிறது அல்லது வட்டி குறைக்கப்படுகிறது.

2009-10-ம் ஆண்டில் வேளாண் கடன் ரூ. 2,85,000 கோடி கொடுக்கப்பட்டுள்ளது. 2010-11-ம் ஆண்டில் ரூ. 3,14,200 கோடி கடன் கொடுத்திருக்கிறார்கள். ஆண்டுக்கு ஆண்டு விவசாயத்துக்கான கடன் ஒதுக்கீடு உயர்ந்துகொண்டே போகிறது. ஆனால், விவசாயிகள் சாவதும் கூடிக்கொண்டே போகிறது. ஏன் இந்த முரண்?

இதில் எந்தவித முரணும் இல்லை. செத்துக் கொண்டிருப்பவன் எல்லாரும் ஏழை சிறு விவசாயிகள். இந்தக் கடனை வாங்கி, அரசு சலுகையை அனுபவித்துக் கொண்டிருப்போர் அனைவரும் பெருவிவசாயிகள். இவர்கள் மட்டுமன்றி, வேளாண்மை சார்ந்த தொழில்நிறுவனங்களான டிராக்டர், விதைப்பான், பூச்சிமருந்து தெளிப்பான் போன்ற பண்ணைக் கருவிகள் உற்பத்தியாளர்கள் மற்றும் விதை உற்பத்தியாளர்கள் வங்கிகளில் பெறும் கடன்தொகை பல ஆயிரம் கோடி ரூபாய். இத்தகைய வேளாண் சார்ந்த தொழில்களுக்காக அளிக்கப்படும் கடன் 1970-ல் வெறும் 3% ஆக இருந்தது. இது ஆண்டுதோறும் வளர்ந்து 2010-ம் ஆண்டில் 33% ஆக உயர்ந்துள்ளது.

பெருவிவசாயிகளும், வேளாண் சார்ந்த தொழில்நிறுவனங்களும்தான் அரசு ஆண்டுதோறும் ஒதுக்கும் வேளாண் கடனைப் பெற்றுப் பயன் அடைபவர்கள். ஆண்டுக்கு ரூ. 25,000 முதல் ஒன்று அல்லது இரண்டு லட்சம் வரை கடன் வாங்குவோர் எண்ணிக்கை மிகவும் குறைவு. ரிசர்வ் பாங்க் புள்ளிவிவரப்படி, இத்தகைய சிறுகடன் பெறுவோர் 2000-ம் ஆண்டில் 35.2% ஆக இருந்தது. 2006-ம் ஆண்டில் 13.3% ஆகக் குறைந்துவிட்டது. தற்போது இன்னும் குறைந்திருக்கும் என்பதைத்தான் தொடரும் விவசாயிகளின் தற்கொலை உணர்த்துகிறது.

நிலத்தில் இறங்கிப் பாடுபடும் விவசாயிக்கு ஒதுக்கப்படும் வேளாண் கடன் தனியாகவும், வேளாண் சார்ந்த தொழில்களுக்காக ஒதுக்கப்படும் கடன் தனியாகவும் பிரிக்கப்பட வேண்டும். சிறுவிவசாயிகளுக்கே முன்னுரிமை தர வேண்டும். ஏனென்றால், கடனுக்காகத் தற்கொலை செய்துகொள்ளும் விவசாயிகள் அனைவரும் சிறுவிவசாயிகளே!

சிறு விவசாயிகளுக்குத் தங்களது சலுகைகள் என்னென்ன, கடன் வசதி என்னென்ன அதை எப்படிப் பெறுவது என்பது தெரியாது. தெரிவிக்கப்படுவதும் கிடையாது. வேடிக்கை என்னவென்றால், இந்த சிறு விவசாயிகளின் வாக்குகளால்தான் அரசியல்வாதிகள் வெற்றியடைகிறார்கள். ஆட்சி அமைக்கிறார்கள். இவர்களால் வாக்களிக்க மட்டுமே முடியும். பெரு விவசாயிகளைப்போல கவனிக்க வேண்டியவர்களைக் கவனிக்கத் தெரியாது.

வள்ளுவப் பெருந்தகை இன்று திருக்குறள் எழுதினால் "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' குறளை எழுதியிருக்க மாட்டார்.

## வேளாண் பல்கலை. மாணவர்கள் வயல்வெளிப் பயிற்சி

First Published : 17 Jul 2012 11:30:24 AM IST

தருமபுரி, ஜூலை 16: தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்கள் பாலக்கோட்டில் முகாமிட்டு, வயல்வெளிகளில் நேரடிப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

பல்கலையில் 4-ம் ஆண்டு பயிலும் மாணவர்கள், ஊரக மேலாண்மை அனுபவத் திட்டத்தின் கீழ் இந்த பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டாரத்துக்குள்பட்ட முனியப்பன் கோவில் கொட்டாய் கிராமத்தில் துவரை நாற்று நடவு முறை குறித்து விவசாயிகளுடன் கலந்துரையாடினர். பிளாஸ்டிக் பைகளில் மேற்கொள்ளப்படும் இந்த மாற்று நடவு முறையால், பருவமழை தாமதமானாலும் குறித்த பருவில் நாற்று நடவு மேற்கொள்ள முடியும். மேலும், நடவு வயலில் பயிரின் காலம் 25 முதல் நாள் குறைக்கப்படுகிறது.

அதிக ஆழத்தில் நடவு செய்யப்படுவதால், வேர் வளர்ச்சி அதிகரித்து வறட்சியைத் தாங்கி பயிர் வளர ஏதுவாக அமையும். வரிசை நடவு முறை செய்வதால் பயிர் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ள எளிதாக உள்ளது. நடவு செய்த 20 முதல் 30 நாள்களுக்குப் பிறகு 5-6 செ.மீ. அளவுக்கு நுனிக் குருத்தை கிள்ளி விடுவதால் பக்கக் கிளைகள் அதிகரித்து விளைச்சலும் அதிகரிக்கும்.

பூப் பிடிக்க தொடங்கியவுடன் பயறு ஒண்டர் தெளிப்பதால் பூ உதிர்தல் தவிர்க்கப்படும். காய்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். நேரடி விதைப்பின் மூலம் கிடைக்கும் மகசூலைவிட நாற்று நடவு முறையில் 30 சதவீதம் அதிக மகசூல் கிடைக்கும் என்பது குறித்து விவசாயிகளுக்கு வேளாண்மைத்துறையினர் எடுத்துக் கூறினர். பல்கலை. மாணவர்களும் பயிற்சி பெற்றனர்.

பாலக்கோடு வட்டார அட்மா திட்ட அலுவலர்கள் செ. தேவி, அ. கலையரசி, இ. கோபிநாத் ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

## டெல்டா விவசாயிகளுக்கு ரூ. 10 ஆயிரம் இழப்பீடு வழங்கக் கோரிக்கை

First Published : 17 Jul 2012 12:33:36 PM IST

ஆலங்குடி, ஜூலை 16: மேட்டூரில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறக்காததால் டெல்டா பகுதியில் நெல் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, ஒரு ஏக்கருக்கு ரூ. 10 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டுமென விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஆலங்குடி அருகேயுள்ள கறம்பக்குடியில் அச்சங்கத்தின் சார்பில் திங்கள்கிழமை நடைபெற்ற மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும்,காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பின்படி தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டிய தண்ணீரை கர்நாடகம் வழங்க வேண்டும். காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிட வேண்டும். மின் இணைப்பு கோரி காத்திருப்போருக்கு முன்னுரிமை அடிப்படையில் இணைப்பு வழங்க வேண்டும். ஒருங்கிணைந்த டெல்டா பகுதியில் விடுபட்டுள்ள ஆலங்குடியையும் சேர்த்து 12 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்கவேண்டும். மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஜூலை 22-ம் தேதி கறம்பக்குடி வட்டாட்சியர் அலுவலகத்தை முற்றுகையிடுவது என்பன உள்ளிட்டத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்துக்கு மாவட்டச் செயலர் எஸ். பொன்னுச்சாமி தலைமை வகித்தார்.

மாவட்டநிர்வாகிகள் க. சுந்தர்ராஜன், வி. ராமையா, என். பழனிவேல்,ஆர். முருகையா, டி. சத்தியமூர்த்தி, எம். அய்யாவு, கே. திருஞானம் உள்ளிட்டோர் பேசினர்.

## முட்டை விலை

First Published : 17 Jul 2012 11:31:52 AM IST

நாமக்கல், ஜூலை 16: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு திங்கள்கிழமை, அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ.2.70, சென்னையில் ரூ. 2.80.

கறிக்கோழி விலை

பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு திங்கள்கிழமைஅறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள்

முதல் விலை கிலோ ரூ.60, முட்டைக் கோழி கிலோ ரூ.38.

## 1,226 கால்நடைகளுக்கு சிகிச்சை

First Published : 17 Jul 2012 12:30:12 PM IST

பெரம்பலூர், ஜூலை 16: பெரம்பலூர், ரெங்கநாதபுரம் கிராமத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற சிறப்பு முகாமில் 1,226 கால்நடைகளுக்கு இலவச சிகிச்சை அளிக்கப்பட்டது என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

ரெங்கநாதபுரம் கிராமத்தில், நடைபெற்ற முகாமில் கால்நடைகளுக்கு குடற்புழு நீக்க மருத்துகள் மற்றும் சிறந்த ககன்றுகளின் உரிமையாளர்களுக்குப் பரிசுகளை வழங்கி அவர் பேசியது:

நடப்பு ஆண்டில் பெரம்பலூர், ஆலத்தூர், வேப்பூர், வேப்பந்தட்டை ஆகிய ஒன்றியங்களில் 56 கால்நடை பாதுகாப்பு திட்ட சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளன. இதற்காக தலா ரூ.4,200 வீதம் ரூ. 2,35,200 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் 2,000 நபர்களுக்கு கறவை மாடுகள் வாங்க ரூ. 4 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 5 அல்லது 6 மாடுகள் கொண்ட சிறிய அளவிலான பால் பண்ணைகள் அமைக்க கடன் வழங்கப்படும்.

ஆவின் மூலம் வட்டத்துக்கு ஒரு கால்நடை மருத்துவர் வீதம் மொத்தம் 4 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள், ஒவ்வொரு பால் கூட்டுறவு சங்கத்துக்கும் மாதம் இரண்டு முறை சென்று சிசிச்சை, செயற்கை கருவூட்டல் மற்றும் பராமரிப்பு ஆலோசனைகளை வழங்குவர் என்றார்.

## தோட்டக்கலைத்துறையில் பயன்பெற அழைப்பு

First Published : 17 Jul 2012 12:29:24 PM IST

பெரம்பலூர், ஜூலை 16: பெரம்பலூர் மாவட்டத்தில், தோட்டக்கலைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் மூலம் பயனடைய விரும்பும் விவசாயிகள் தங்களது பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது விடுத்துள்ள செய்திக்குறிப்பு:

தோட்டக்கலைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் தேசிய தோட்டக்கலை திட்டத்துக்கு நடப்பு ஆண்டுக்கு ரூ. 32.13 லட்சம் நிதி பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், பல ஆண்டு பழப்பயிர்களான மா அடர் நடவுக்கு ஹெக்டருக்கு ரூ. 24 ஆயிரம் வீதம் 10 ஹெக்டருக்கு ரூ. 2.40 லட்சமும், மா இயல்பான நடவுகு ஹெக்டருக்கு ரூ. 9 ஆயிரம் வீதம் 10 ஹெக்டருக்கு ரூ. 99 லட்சமும்,

எலுமிச்சை சாகுபடி ஹெக்டருக்கு ரூ. 15 ஆயிரம் வீதம் 15 ஹெக்டருக்கு ரூ. 2.25 லட்சமும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

இவற்றை பயிரிடும் விவசாயிகளுக்கு மானியத்தில் நடவு பொருள்கள் மற்றும் இடுபொருள்கள் வழங்கப்பட உள்ளன. திசு வாழை சாகுபடிக்கு ஹெக்டருக்கு ரூ. 31,202 வீதம் 10 ஹெக்டருக்கு ரூ. 3.12 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு மானியத்தில் கன்றுகள் வழங்கப்பட உள்ளன.

மலர்களில், கிழங்கு வகை (சம்பங்கி) மலர்கள் சாகுபடிக்கு ஹெக்டருக்கு ரூ. 45 ஆயிரம் வீதம் 5 ஹெக்டருக்கு ரூ. 2.25 லட்சமும், உதிரி மலர்கள் (சாமந்தி பூ, கனகாம்பரம், மல்லிகை) சாகுபடிக்கு ஹெக்டருக்கு ரூ. 12 ஆயிரம் வீதம் 10 ஹெக்டருக்கு ரூ. 1.20 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

மண் புழு உரம் தயாரித்தலில், நிரந்தர அமைப்பு அமைத்து மண்புழு உரம் தயாரிக்க ஒரு யூனிட்டுக்கு ரூ. 30 ஆயிரம் மானியம் வழங்கப்பட உள்ளது. தேனீ வளர்ப்பு மூலம் மகரந்தச் சேர்க்கையை ஊக்கப்படுத்த தேனீக்கள் 1 யூனிட் ரூ. 700க்கும், தேனீப் பெட்டி 1 ரூ. 800-க்கும் மானிய விலையில் விநியோகம் செய்யப்பட உள்ளன.

விவசாயிகளுக்கு மாவட்டத்துக்குள் பயிற்சியளிக்க ஒருவருக்கு ரூ. 2,000, வெளி மாநிலத்தில் பயிற்சியளிக்க ரூ. 5,000 என 202 பேருக்கு ரூ. 4.10 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

விவசாயிகள் கண்டு உணரும் சுற்றுலாவுக்கு நபர் ஒன்றுக்கு மாநிலத்துக்குள் சென்று வர ரூ. 1,520, வெளி மாநிலத்துக்கு சென்று வர ரூ. 3,000 என 27 பேருக்கு 44 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

அறுவடைக்குப் பின் செய் நேர்த்தி இனத்தில் சிப்பம் கட்டும் அறை அமைக்க (அளவு 9 மீட்டர் - 6 மீட்டர்) அறை ஒன்றுக்கு 50 சத மானியமாக ரூ.1.50 லட்சம் என இரண்டு அறைகள் அமைக்க ரூ. 3 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. தோட்டக்கலைத் திட்டங்களின் கீழ் மானியங்கள் பெற சிறு, குறு விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். எனவே, விவசாயிகள் தங்களது பெயர்களை அந்தந்தப்பகுதி தோட்டக்கலை துறை அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டு பயன்பெறலாம்.

## 20-ல் விவசாயிகள் குறைகேட்பு

First Published : 17 Jul 2012 11:16:48 AM IST

கடலூர், ஜூலை 16: விவசாயிகள் குறைகேட்பு மற்றும் ஆலோசனைக் கூட்டம் 20-ம் தேதி கடலூர் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூடத்தில் காலை 10.30 மணி அளவில் நடக்க உள்ளது.

இது குறித்து மாவட்ட ஆட்சியர் அலுவலக செய்திக் குறிப்பில், கடலூர் மாவட்ட விவசாயிகள், தங்களது வேளாண்மை சார்ந்த குறைகளை கோரிக்கைகளாக வைக்க அனைவருக்கும் வாய்ப்பு வழங்கப்படும்.
கூட்ட அரங்கில் கோரிக்கைகளை தெரிவிக்கும் விவசாயிகள் காலை 10.30 மணிக்குள் தங்களது பெயர் மற்றும் கோரிக்கை வைக்கவுள்ள துறையின் பெயர் ஆகியவற்றை பதிவு செய்துக் கொள்ள வேண்டும். எழுத்துப்பூர்வமாகவும் தங்களது கோரிக்கைகளை மனுவாக வழங்கலாம்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 35.28 அடி

First Published : 17 Jul 2012 11:02:38 AM IST

ஈரோடு, ஜூலை 16: பவானிசாகர் அணை நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 35.28 அடியாக இருந்தது.
அணைக்கு விநாடிக்கு 197 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றிலும், கால்வாயிலும் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 1.77 டி.எம்.சி.

## பவானிசாகர் அணையில் நீர் திறப்பு நிறுத்தம்

First Published : 17 Jul 2012 11:00:53 AM IST

சத்தியமங்கலம், ஜூலை 16: தடப்பள்ளி-அரக்கன்கோட்டை பாசனப் பகுதியில் பலத்த மழை பெய்ததால், பவானிசாகர் அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடுவது தாற்காலிகமாக நிறுத்தப்பட்டது.
சத்தியமங்கலம் அடுத்துள்ள பவானிசாகர் அணையின் நீர்மட்டக் கொள்ளளவு 120 அடி. ஜூன் துவக்கத்தில் பெய்ய வேண்டிய தென்மேற்குப் பருவமழை தொடர்ந்து தாமதமாகி வருவதால் அணைக்கு நீர்வரத்து 102 கன அடியாக குறைந்துவிட்டது. திங்கள்கிழமை மாலை 6 மணி நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 35 அடியாகச் சரிந்துவிட்டது.
இந் நிலையில், தடப்பள்ளி-அரக்கன்கோட்டை பாசனப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை பலத்த மழை பெய்ததையடுத்து, அணையில் இருந்து தடப்பள்ளி அரக்கன்கோட்டை கால்வாய்க்குத் திறந்துவிடப்படும் 1,100 கன அடி நீர் திங்கள்கிழமை தாற்காலிகமாக நிறுத்தப்பட்டது. விவசாயிகளின் தேவைக்கேற்ப அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்படுமென, அணை உதவி செயற் பொறியாளர் பொங்கியண்ணன் தெரிவித்தார்.

காஞ்சிபுரத்தில் மழை: மரக்கிளைகள் முறிந்தன

First Published : 18 Jul 2012 01:11:48 AM IST



காஞ்சிபுரத்தில் பெய்த மழையில் ரங்கசாமி குளம் அருகே முறிந்து விழுந்த வேப்பமரக் கிளை.

காஞ்சிபுரம், ஜூலை 17: காஞ்சிபுரத்தில் செவ்வாய்க்கிழமை பெய்த மழைக்கு நகரின் சில பகுதிகளில் மரக்கிளைகள் முறிந்து விழுந்தன.

காஞ்சிபுரத்தில் கடந்த 3 நாள்களாக மழை பெய்து வருகிறது. இந்நிலையில் செவ்வாய்க்கிழமை மாலை சுமார் அரை மணி நேரம் பலத்த மழை பெய்தது. இதைத் தொடர்ந்து லேசாகத் தூரல் விழுந்து கொண்டே இருந்தது.

÷மழை பெய்த போது வழக்கத்தை விட காற்றின் வேகம் குறைவாகவே இருந்தது. எனினும் ஒரு சில இடங்களில் மரக்கிளைகள் முறிந்து விழுந்தன. மின் வயர்களை ஒட்டியுள்ள மரங்களில் ஏற்கெனவே பெய்த மழைக்கு மரக்கிளைகள் முறிந்து விழுந்ததால், இந்த மழைக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை.

மழை விட்ட பிறகு முறிந்து விழுந்த மரக்கிளைகளை அப்பகுதியை சேர்ந்த மக்களே அகற்றினர்.

நவீன தொழில்நுட்பம்

பதிவு செய்த நாள் : ஜூலை 18,2012,00:00 IST



சம்பங்கி (பூலே ரஜினி) வளர்ப்பு முறை: புனேவிலிருந்து கொண்டுவரப்பட்டு தமிழகத்தில் கொல்லிமலை அடிவாரத்தில் உள்ள பச்சை பெருமாள் பட்டி கிராமத்தில் பயிரிட்டு அமோக விளைச்சல் கண்டு உள்ளார்கள். நன்கு ஆழமாக 3 முறை உழவு, பின் 15 டிராக்டர் மக்கிய தொழு உரம், ஒரு டன் மண்புழு உரம் இட்டு நிலத்தை பண்படுத்த வேண்டும். ஒரு ஏக்கருக்கு விதை பெரிய கிழங்காக இருந்தால் 400-500 கிலோ தேவை. விதைநேர்த்தி செய்தபின் விதை நடவேண்டும். விதைநேர்த்தி செய்ய ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் பெவிஸ்டின் கலந்து விதையை அதில் போட்டபின் அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியாவை பசை போல் செய்து விதையை அதில் கலந்து நிழலில் உலர்த்தி நிலத்தில் நன்கு தண்ணீர் பாய்ச்சி, பின் நடவு செய்ய வேண்டும்.நடவு செய்த 4 மாதத்தில் பூ வர தொடங்கும். (பெரிய கிழங்காக இருந்தால்) கிழங்கின் தன்மையைப் பொறுத்து பூ பூக்கும் காலம் அமையும். மாதம் ஒரு முறை 4 மூடை 19:19:19 மற்றும் கடலை புண்ணாக்கு 10 கிலோ உரமாக இடவேண்டும். இந்த ரகத்திற்கு உரம் அதிகம் தேவை. எனவே நிலத்தின் தன்மையைப் பொறுத்து உரம் இடலாம். இந்த ரகத்தில் ஒரு செடியிலிருந்து ஒரே சமயத்தில் 3-7 தண்டுகள் வரும். ஒரு தண்டில் 50-80 பூக்கள் பூக்கும். வருடம் 2 முறை தொழு உரம் இடவேண்டும். களையை கட்டுப்பாட்டில் வைக்க வேண்டும். ஒரு ஏக்கரில் அதிகபட்சம் 102 கிலோ வரை பூ எடுக்கலாம். சராசரியாக ஒரு ஏக்கரில் 50-70 கிலோ வரை கிடைக்கும். மேலும் விபரங்களுக்கு: பி.ராமர், 97157 29713.

பைக்கோலின்: "லின் பிளாண்டோ' பிரைவேட் நிறுவனம் நீலப்பச்சைப்பாசியை ஒப்பந்த முறையில் விவசாயம் செய்துவருகிறது.

இந்நிறுவனம் கடல்பாசி பயிர் செய்வதில் கடந்த 12 வருடங்களுக்கும் மேலாக அனுபவம் பெற்ற வல்லுனர்கள் மூலம் கடல் தாவரங்களை வளர்த்து வருகிறது.பைக்கோலின் என்பது இயற்கையான சுற்றுச்சூழலுக்கு உகந்த ஒப்பந்த முறையில் பயிர் செய்யப்பட்ட கடல் தாவரத்திலிருந்து தயார் செய்யப்பட்ட உரம்.

இதில் பேரூட்ட, நுண்ணூட்டச் சத்துக்கள் மற்றும் தாவர வளர்ச்சி ஊக்கிகள் நிறைந்து காணப்படுகிறது. இது அனைத்து வகையான பயிர்களுக்கும் திரவ வடிவிலான உரமாக பயன்படுகிறது.

பைக்கோலின் பயிர்களின் உற்பத்தியை 13 சதத்திலிருந்து 40 சதம் வரை உற்பத்தியை பெருக்க உதவுகிறது. கரும்பு, கத்தரிக்காய், தக்காளி, உருளை, மிளகாய், சோளம், நெல், கோதுமை, சோயாபீன்ஸ், நிலக்கடலை, மஞ்சள், ஏலக்காய், கோலியஸ், ரோஜா மற்றும் செவ்வந்தி பயிர்களில் பயன்படுத்தலாம்.

பைக்கோலினை ஒரு சதம் முதல் 2 சதம் வரை தண்ணீரில் கரைத்து விதைநேர்த்தி செய்ய வேண்டும். தெளிப்பான் மற்றும் சொட்டுநீர் பாசனத்திற்கு 2 சதம் முதல் 3 சதம் வரை தண்ணீரில் கரைத்து பயன்படுத்தலாம். வேறு எந்த வேதி உரங்களுடனும் சேர்த்து பயன்படுத்தக்கூடாது.

பைக்கோலின் பற்றிய விரிவான விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: லின் பிளான்டோ பிரைவேட் லிமிடெட், 66ஏ, மெயின்ரோடு, மாடக்குளம், மதுரை-625 003. 94431 42107, 94875 38573 (தகவல்: க.தி.செல்வ விநாயகம் மற்றும் முனைவர் வெ.சுந்தரராஜன், நவீன வேளாண்மை, ஜூன் 2012)தென்னை ராம்கங்கா: கையால் பறிக்கும் உயரத்தில் காய்கள், இரண்டரை ஆண்டிலேயே காய்ப்பு, மரத்திற்கு 300 இளநீர் காய்கள்.

நாற்றுக்கள் வாங்கவும், ஆலோசனைகள் பெறவும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: "நாசுவன்பாளையம், வெங்கிட்டாபுரம் போஸ்ட், பல்லடம், திருப்பூர்-641 664.
98422 62166, 97153 71717. போன்: 04255-252 166.-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்

## மணம் கமழும் குண்டு மல்லிகை பணமும் தரவல்லது

பதிவு செய்த நாள் : ஜூலை 18,2012,00:00 IST




மல்லிகை சாகுபடியை துவங்கும்போது நம் கவனத்திற்கு வரவேண்டியது நட்ட மல்லிகைச்செடி தொடர்ந்து பதினைந்து வருடங்களுக்கு நமக்கு பூ மகசூலினைத் தரவேண்டும். பிறகுதான் பழைய தோட்டத்தை அழித்துவிட்டு புதிய தோட்டம் அமைக்க வேண்டும். மல்லிகை சாகபடிக்கு மணல் கலந்த செம்மண் ஏற்றது. மண்ணின் காரத்தன்மை 6 முதல் 8 வரை இருக்கலாம். செடி வளர்ச்சிக்கும் பூக்கள் உற்பத்திக்கும் சரியான வெப்பநிலை தேவை. சாகுபடி சமயம் செடிகளைத் தாக்கும் பூச்சிகளை அழிக்க வேண்டும். மல்லிகையில் தழைகள் நிறம் மாறுதல் இரும்புச்சத்து பற்றாக்குறையாகும். உடனே பரிகாரம் செய்ய வேண்டும். டி.ஏ.பி. உரங்கள் இடுவதற்கு பிரத்யேக கவனம் தரவேண்டும். பயிருக்கு அன்னபேதி உப்பு கரைசல் தெளிக்கலாம். சாகுபடியில் மகசூலினை அதிகரிக்க கவாத்து செய்தல் வேண்டும். பூக்கள் பெரியதாக போரான் சத்து அளிக்க வேண்டும்.நல்ல தரமான மல்லிகை பதியன்களை வாங்கி புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் நடலாம். வேர் ஆழமாக இறங்கி பூக்கள் பிடிக்க ஆவன செய்ய வேண்டும். ஆரம்பக்கட்டத்தில் வரும் புழு, பூச்சிகளை அழிக்க வேண்டும். சிலந்திகளையும் அழிக்க வேண்டும். மல்லிகைச்செடிகள் சோர்வு அடைந்தால் "சைட்டோசைம்' என்னும் பயிர் ஊக்கியை அடிக்க வேண்டும். பலவித கரைசல்களை செடிகள் மேல் தெளிக்கும்போது திரவ சோப்பினை கலந்து தெளிக்க வேண்டும் (உதாரணம் சாண்டோவிட்). (குண்டு மல்லிகை கடுமையாக உழைக்கும் விவசாயிகளை விரும்புகின்றது) விவசாயியின் மேற்பார்வையில் பெண்கள் இருட்டில் அரும்புகளை (மலராத பூ) பறிப்பார்கள். பெண்கள் செடிகளின் மத்தியில் நின்று அறுவடை செய்யும்போது தங்களது விரல்களின் ஸ்பரிசத்தினால் அரும்புகளை கண்டுபிடித்து விடுகின்றனர். ஸ்பரிசம் இறைவன் இவர்களுக்கு கொடுத்த வரம். அரும்பு பறித்தல் விடியற் காலையில் முடிந்துவிடுகின்றது. இதனை உடனே விற்பனை செய்து மிக அதிகமான விலையை விவசாயி பெறுகிறார். நேரம் அதிகமாக அதிகமாக பூவின் விலை குறைந்துவிடுகின்றது. மல்லிகைப்பூ சாகுபடி செய்யும் திறமையான விவசாயி விடியற்காலம் மூன்று மணிக்கு தனது டிராக்டரை

எடுத்துக்கொண்டு மேலும் அரும்புகள் அறுவடை செய்யும் பெண் ஆட்களை அழைத்துக்கொண்டு மல்லிகைத் தோட்டம் சென்றடைகிறார். விவசாயி காலை மூன்று மணியிலிருந்து இரவு ஒன்பது மணி வரை அதாவது 18 மணி நேரம் கடுமையாக உழைக்கிறார். இதோடு மட்டுமல்ல. வீட்டில் சிறிது நேரம் இருந்துவிட்டு மீண்டும் மல்லிகைத் தோட்டம் சென்று முக்கிய விவசாய வேலைகளாகிய உரங்கள் இடுதல், பாசனம் செய்தல், பயிர் பாதுகாப்பு போன்றவைகளை செய்கிறார். மல்லிகை சாகுபடியில் வெற்றியை தோற்றுவிப்பவர் விவசாயி ஆவார். மல்லிகை செடி விவசாயிக்கு தினமும் வருமானம் தருகின்றது. திறமையான விவசாயிகள் ஏக்கரில் ரூ.அரை லட்சம் வரை லாபம் எடுக்கின்றனர்.-எஸ்.எஸ்.நாகராஜன்.

## வனிலா

பதிவு செய்த நாள் : ஜூலை 18,2012,00:00 IST



வனிலா என்பது இயற்கையான நறுமணப் பண்டங்களுள் ஒன்றாகும். இதன் விவசாயம் மிகவும் பலன் தரத்தக்கது. முன்னவே நடவு செய்த தாங்கு மரங்களின் அருகிலேயே வனிலாத் தண்டுகளை நடவு செய்வதே அதற்குரிய முறையாகும். ஆதலால் இதன் கொடிகளைத் தாங்கு மரங்களின்மீது கட்டி ஏற்றிவிட வேண்டும். இதனுடைய தூர்ப் பாகங்களில் போதுமான அளவுகளில் மூடாக்குகள் இட்டால் வேர்கள் நன்றாக நிலத்தில் பரவும். இளம் கொடிகளைச் சூரிய ஒளியின் தாக்கத்திலிருந்து பாதுகாத்து இதன் வளர்ச்சியைப் பராமரிக்க வேண்டும். வளர்ந்துவரும் தண்டுகளின் நுனிகளிலிருந்து 10-15 செ.மீ. நீளம் வரை முறித்துவிட வேண்டும். அவ்வாறு

செய்தால்தான் பூக்கள் உண்டாவதற்கு ஏதுவாக இருக்கும்.பாக்கு தோப்புகளிலும் தென்னந் தோட்டங்களிலும் ஊடுபயிராக வனிலா விவசாயம் செய்யப் படுகிறது.

கிராம்பு, ஜாதிக்காய், ஏலக்காய், மிளகு, பட்டை போன்ற பல்வேறு ஸ்பைசஸ் பயிர்களின் ஊடாகவும் பயிரிடலாம். அவ்வாறு ஊடுபயிராக இது அமையும்போது இதன் விவசாயத்திற்கு என்று பிரத்யேகமாக எந்தச் செலவும் தேவைப்படுவதில்லை.

சொற்பமான ஆட்களைக்கொண்டு மகரந்தச் சேர்க்கை செய்தாலே போதும்.தென்னிந்தியாவில் கர்நாடகா மாநிலத்தில் வனிலாவின் விவசாயம் சிறப்பாக இயங்கிவருகிறது.

கர்நாடகாவில் சாகரா வட்டத்தில் உள்ள விவசாயிகள் "மலநாடு வனிலா விவசாயிகளின் சங்கம்' என்ற ஸ்தாபனத்தின் மூலம் தங்களைப் பலப்படுத்திக் கொள்கின்றனர்.

கேரளாவில் சில பாகங்களிலும் வனிலா விவசாயம் செய்யப்படுகிறது. தமிழகத்தில் மலைப்பாங்கான பிரதேசங்களில் இதனை விவசாயம் செய்வதற்கும் அதன்மூலம் பெரும் பணம் ஈட்டவும் சாத்தியக்கூறுகள் உள்ளன.

அன்னிய நாடுகளைப் பொறுத்தமட்டில் மெக்சிகோ, மடகாஸ்கர், இந்தோனேஷியா, ரீயூனியன் தீவுகள் ஆகியவற்றில் இதன் விவசாயம் சில நூறு ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது.

இந்த நாடுகள் மேற்கத்திய நாடுகளுக்கு இதனை ஏற்றுமதிசெய்து அன்னியச் செலாவணியை பெருமளவில் ஈட்டுகின்றன.

வனிலா சேர்க்கப்பட்ட கேக் வனிலா என்ற பெயரில் பேக்கரிகளில் கிடைக்கின்றது. இந்த கேக் மிக மென்மையாகவும் இனிய சுவையுடனும் உள்ளது.

சிறுவர் சிறுமிகளின் இஷ்டபூர்வமான ஒரு திண்பண்டமாக இது விளங்குகிறது.காசர்கோடு சார்ந்த வணிகர்கள் தொழில்முறையில் வனிலாவை மூலப்பொருளாகக் கொண்டு "வனிலா சுகர்' என்ற புதிய படைப்பை உண்டாக்கியுள்ளனர்.

இதன் தொடர்பில் ஐஸ்கிரீம், பாதாம்பால் முதலான சுவையான வகைகளும் தயாரிக்கப்படுகின்றன.எஸ்.நாகரத்தினம், 56, லட்சுமிகாலனி, கச்சேரி ரோடு, விருதுநகர்ண்

## கொத்தவரை பயிரைத்தாக்கும் காய்ப்புழு

பதிவு செய்த நாள் : ஜூலை 18,2012,00:00 IST



பூச்சி தாக்குதலின் அறிகுறிகள்: இந்தப்பூச்சி பயறு வகைப் பயிர்களைத் தாக்கக்கூடிய முக்கியமான பூச்சிகளில் ஒன்று. கொத்தவரையைத் தவிர தக்காளி, பருத்தி, மக்காச்சோளம், உளுந்து, பாசிப்பயறு, நிலக்கடலை, மொச்சை, அவரை, மிளகாய், சோயா மொச்சை போன்ற பல்வேறு பயிர்களையும் தாக்கக்கூடியது. புழுக்கள் காய்களைத் துளைத்து உள்ளிருக்கும் விதைகளை உண்டு அதிக சேதம் விளைவிக்கக்கூடியவை. புழுவின் தலையும் உடலின் முன்பகுதியும் மட்டுமே காய்களுக்குள் செல்லும். மதிப்பகுதி காயின் வெளியே காணப்படும். ஒரு புழு பல காய்களைத் தாக்கும். காய்கள் உண்டாவதற்கு முன் புழுக்கள் செடிகளின் குருத்துப் பகுதிகளையும் இலைகளையும் கடித்து உண்டு அழிக்கும்.பூச்சியின் வாழ்க்கை சரிதம்: பெண் அந்துப்பூச்சி, முட்டைகளை இலைகள், பூ மொக்குகள், பூக்கள், பிஞ்சுக்காய்கள் ஆகியவற்றின் மேல் தனித்தனியாக இடும். ஒரு பூச்சி 300-1000 முட்டைகள் வரையில் இடக்கூடியது. அவை கோள வடிவமாகவும் இளம் மஞ்சள் நிறத்திலும் வரிவரியாக கோடுகளுடனும் தென்படும். இவை 3-5 நாட்களில் பொரித்து இளம் புழுக்கள் வெளிவரும். இளம் புழுக்கள் வெண்மை கலந்த மஞ்சள் நிறத்துடனும் கரும்பழுப்பு நிறத் தலையைக் கொண்டும் உடலில் நுண்ணிய கருமை நிறப் புள்ளிகளுடனும் மெல்லிய ரோமங்களுடனும் தென்படும். அவை 15-25 நாட்களில் முழு வளர்ச்சிஅடையும். வளர்ந்த புழுக்கள் மண்ணுக்கடியில் கூண்டுப்புழுக்களாக மாறும். கூண்டுப்புழுவிலிருந்து அந்துப்பூச்சி 10-15 நாட்களில் வெளிவரும். அந்துப்பூச்சிகள் தடிமனாகவும் இளம்பழுப்பு நிறத்திலும் தென்படும்.

பூச்சி கட்டுப்பாடு: * கொத்தவரை அறுவடைக்குப் பின் உடனடியாக செடிகளை அப்புறப்படுத்தி விட வேண்டும்.

* வயலை நன்றாக உழுது மண்ணுக்கடியில் இருக்கும் கூண்டுப்புழுவை அழிக்கலாம்.
* புழுக்களால் தாக்கப்பட்ட காய்களைப் பறித்து அழித்துவிட வேண்டும்.
* வயலில் காணப் படும் பெரிய புழுக்களை கையால் சேகரித்து அழிக்க வேண்டும்.
* விளக்குப்பொறி வைத்து அந்துப் பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம்.
* இனக்கவர்ச்சிப் பொறிகளை ஏக்கருக்கு 5 வீதம் வைத்து ஆண் அந்துப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம்.
* டிரைக்கோகிரம்மா என்னும் முட்டை ஒட்டுண்ணி முட்டைகளை தாக்கி அழிக்கக்கூடியது.
* பிரக்கான், கிலோனஸ் போன்ற புழு ஒட்டுண்ணிகள் புழுக்களைத் தாக்கி அழிக்கக்கூடியவை.

முனைவர் கோ.பி.வனிதா,
வேளாண்மைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை.
முனைவர் ரா.கோபாலகிருஷ்ணன்,
ரோவர் வேளாண்மைக் கல்லூரி, பெரம்பலூர்.

## விதை நெல் வாங்க விவசாயிகள் ஆர்வம்

பதிவு செய்த நாள் : ஜூலை 18,2012,00:33 IST

திருத்தணி:மழை பெய்யத் துவங்கியதையடுத்து, விவசாயிகள் ஆர்வத்துடன் விதை நெல் வாங்கிச் செல்கின்றனர்.திருத்தணி ஒன்றிய, 27 ஊராட்சிகளில், 8,000க்கும் மேற்பட்ட விவசாயிகள் உள்ளனர்.

போதிய மழை பெய்யாததால், நிலத்தடி நீர் குறைந்து, தங்களது விளை நிலத்தை விவசாயிகள் காயப் போட்டு இருந்தனர்.இந்நிலையில் திருத்தணி பகுதியில், 12 முதல் 16ம் தேதி வரை மழை பெய்தது. இதனால் விவசாய கிணறுகளில் நிலத்தடி நீர் உயர்ந்து உள்ளது.

இதையடுத்து, திருத்தணி உதவி வேளாண்மை கூட்டுறவு விற்பனை நிலையத்தில், தினசரி, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் வந்து, விதை நெல்களை வாங்கிச் செல்கின்றனர்.

கடந்த, நான்கு நாட்களில் மட்டும், பொன்னி 10 டன், ஏ.டி.டி., 39 ரகம் மூன்று டன், கோ-48 ரகம் இரண்டு டன், கோ-50 ரகம் ஒரு டன், உளுந்து அரை டன் என, விதை நெல் விற்பனை ஆகியுள்ளது. தொடர்ந்து கிராமங்களில் இருந்து, விதை நெல் வாங்க விவசாயிகள் வந்த வண்ணம் உள்ளனர்.

## சம்பா பருவத்தில் நெல் சாகுபடி

பதிவு செய்த நாள் : ஜூலை 18,2012,00:58 IST

செஞ்சி:செஞ்சி பகுதியில் நெல் விலை உயர்வினால் சம்பா பருவத்தில் நெல் சாகுபடி செய்வதற்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.தமிழகத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக சம்பா சாகுபடி அறுவடை நடந்த போது நெல் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டது. உரம், பூச்சி மருந்து, ஆள் கூலி ஆகியன உயர்ந்து விட்ட நிலையில் "உழவன் கணக்கு பார்த்தால் உழவு கோலும் மிஞ்சாது" என்ற ரீதியில் நெல்லின் விலை இருந்தது.

பொன்னி முதல் ரகம் 75 கிலோ மூட்டை 900 முதல் 1,400 ரூபாய் வரை விற்பனையானது. கோ-45, 630 முதல் 700 ரூபாய்க்கும், டீலக்ஸ் 700 முதல் 770 ரூபாய்க்கும், பொன்மணி 680 முதல் 760 ரூபாய் வரைக் கும் விற்பனையானது.இதில் பெரும்பாலான விவசாயிகளுக்கு சராசரிக்கும் குறைவாக விலை கிடைத்தது. இதனால் விரக் தியடைந்த பெரும்பாலான விவசாயிகள் அடுத்து வந்த குறுவை சாகுபடியின் போது நெல் பயிரிடுவதை தவிர்த்து கரும்பு பயிருக்கு மாறினர்.

உற்பத்தி குறைவு

ஏற்கனவே விளைநிலங்கள் ரியல் எஸ்டேட்டாக மாறி விட்ட நிலையில் நெல் சாகுபடியின் பரப்பளவும் குறைந்ததால் குறுவை அறுவடை சீசனின் போது நெல் வரத்து வெகுவாக குறைந்தது. இதனால் நெல் விலை உயர துவங்கியது.

மத்திய அரசின் இரண்டு அறிவிப்புகள்

கடந்தாண்டு வரை அரிசி ஏற்றுமதிக்கு மத்திய அரசு விதித்திருந்த தடையை ஜனவரி மாதம் விலக்கியது. இதனால் தமிழகம், ஆந்திரா, கர்நாடகாவில் இருந்து முதல் ரக அரிசி சிங்கப்பூர், மலேசியா மற்றும் வளைகுடா நாடுகளுக்கான ஏற்றுமதி துவங்கியது. இதனால் முதல் ரக நெல்லின் விலை சில நாட்களிலேயே 200 ரூபாய் வரை உயர்ந்தது. அடுத்து இரண்டாவது அறிவிப்பாக மத்திய அரசு மே மாதம் நெல் கொள்முதல் விலையை குவிண்டாலுக்கு 170 ரூபாய் உயர்த்தியது. இது போன்ற காரணங்களால் நெல் விலை எப்போதும் இல்லாத அள விற்கு அதிக விலையை எட்டியது.

வரலாறு காணாத விலை

கடந்த இரண்டுமாதமாக பொன்னி நெல் அதிக பட்சம் 1,700 ரூபாய்க்கும் கோ-45, 1,250 ரூபாய்க்கும், டீலக்ஸ் 1,300 ரூபாய்க்கும், பொன்மணி 1,220க்கும் விற்பனையாகி வருகிறது. பல ஆண்டுகளாக நிலையாக இருந்த நெல் விலை ஒரே ஆண்டில் கிடுகிடுவென வரலாறு காணாத விலையை எட்டியது. இதனால் நெல் சாகுபடி செய்து வந்த விவசாயிகளுக்கு புதிய நம்பிக்கையும், உற்சாகமும் ஏற்பட்டது.

கடந்த ஆண்டு சம்பா பருவத்தின் போது நெல் நடவு செய்யாமல் கரும்புக்கு மாறிய விவசாயிகளும், வெட்டு கூலி, ஏற்றுக்கூலி, லாரி வாடகை ஆகியன உயர்ந்ததுடன், ஆலைகள்

கட்டிங் ஆர்டர் கொடுப்பதில் செய்து வரும் தாமதத்தினாலும் அதிருப்தி அடைந்துள்ளனர். இந்நிலையில் öŒஞ்சி பகுதியை @Œர்ந்த பெரும்பாலான விவŒõயிகள் இந்தாண்டு நெல் நடவு செய்ய முடிவு செய்துள்ளனர்.

நெல் சாகுபடி அதிகரிக்கும்

இவர்கள் தமிழர்களின் நீண்ட நாள் பாரம்பரியப்படி வரும் ஆடி 18ம் தேதியன்று நெல் நாற்று விடுவதற்கு தயாராகி வருகின்றனர். இதற்காக விதை நெல் சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர். கடந்த சில ஆண்டுகளாக வேகமாக குறைந்து வந்த நெல் சாகுபடியின் பரப்பளவு இந்தாண்டு மீண்டும் உயரும் சூழ்நிலை உருவாகி உள்ளது.

**மண்புழு உர உற்பத்தி கூடம் சர்க்கரை ஆலையில் திறப்பு**

பதிவு செய்த நாள் : ஜூலை 18,2012,01:28 IST

கள்ளக்குறிச்சி:கச்சிராயபாளையத்தில் இயங்கும் கள்ளக்குறிச்சி-2 கூட்டுறவு சர்க்கரை ஆலை வளாகத்தில் மண் புழு உர உற்பத்திக்கூடத்தினை ஆட்சியர் சிவமலர் திறந்து வைத்தார்.சர்க்கரை உற்பத்தியின் உப பொருளான ஆலைக்கழிவு மண்ணை மறுசுழற்சி செய்து மதிப்புக் கூட்டப்பட்ட மண்புழு உரமாக மாற்றுவதற்காக மண்புழு உற்பத்திக்கூடம் ஆலை வளாகத்தினுள் நிறுவப்பட்டுள்ளது. ஆலைக்கழிவு மண், தொழு உரம் மற்றும் மண்புழுக்கள் மூலம் கம்போஸ்ட் உரம் உற்பத்தி செய்து ஆலை அங்கத்தினர்களுக்கு வினியோகிப்பதற்காக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.இதன் மூலம் சுற்றுச் சூழல் பாதிப்பு, இயற்கை வேளாண் மை, மறுசுழற்சி செய்தல், ரசாயன உரங்களின் தட்டுப்பாடு மற்றும் கூடுதல் விலை, குறைந்து வரும் மண் வளத்தை காத்தல் போன்ற காரணங்களால் தற்போது மண்புழு உர தயாரிப்பு மற்றும் பயன்பாடு முக்கியத்துவம் பெறுகிறது. இதனை ஆலை அங்கத்தினர்கள் நல்ல முறையில்

**தொடர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : ஜூலை 18,2012,01:18 IST

விழுப்புரம்:தொடர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.தென்மேற்கு பருவ மழை கடந்த மாதம் 10ம் தேதிக்கு பின் துவங்கியது. இருப்பினும் விழுப்புரம் மாவட்டத்தை தவிர்த்து பல்வேறு மாவட்டங்களில் அவ்வப்போது பரவலாக மழை பெய்து வந்தது. இதனால் விழுப்புரம் மாவட்டத்தில் நீர் நிலைகள் தண்ணீர் இன்றி காணப்பட்டது.இந்நிலையில் வெப்ப சலனத்தின் காரணமாக கடந்த 4 நாட்களாக விழுப்புரம் மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்து

வருகிறது. பகல் நேரத்தை தவிர்த்து இரவு நேரங்களில் மட்டும் மழை பெய்வதால் விவசாய பணிகள் பாதிப்பு இன்றி நடக்கிறது.ஆறுகள், ஏரிகள், குளங்கள் மற்றும் குட்டைகளில் ஓரளவு நீர் தேங்கி இருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## விதைகள்தட்டுப்பாடால் விவசாயிகள் அவதி

பதிவு செய்த நாள் : ஜூலை 18,2012,01:09 IST

விழுப்புரம்:ஆடிப்பட்டத்திற்கு விதைகள் கிடைக்காமல் விவசாயிகள் அவதியடைந்து வருகின்றனர்."ஆடிப்பட்டம் தேடி விதை' என்பதற்கு ஏற்ப, தற்போது பருவ மழை துவங்கியுள்ள நிலையில், விவசாயிகள் சாகுபடி பணியில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். கடந்த சில நாட்களுக்கு முன் பெய்த பருவ மழையை பயன்படுத்தி மானாவாரி வேர்க்கடலை, உளுந்து, கம்பு, திணை உள்ளிட்ட பயிர்கள் விதைப்பு செய்ய, விவசாயிகள் நிலத்தை தயார்படுத்தி வைத்துள்ளனர்.ஆனால் வேளாண் துறை அலுவலகங்களில், மான்ய விலையில் விவசாயிகளுக்குவழங்கப்படும் விதைகள் இது வரை வினியோகம் செய்யவில்லை. சம்பா போகம், நெல் சாகுபடிக்கு தேவையான வெள்ளை பொன்னி, டீலக்ஸ் பொன்னி உள்ளிட்ட விதைகளும் விவசாயிகளுக்கு வேளாண் அலுவலகங்களில் கிடைக்கவில்லை.தற்போது தொடர்ந்து மழை பெய்து வருவதால், விவசாயிகள் தனியார் விதைப் பண்ணைகளில் விதைகள் வாங்க முயற்சித்து வருகின்றனர். தனியார் பண்ணைகளிலும் விதைகள் தட்டுப்பாடு உள்ளது.உரிய பருவத்தில் விவசாயிகள் சாகுபடி செய்வதற்கு தேவையான தரமான விதைகளை, மான்ய விலையில் வழங்கிட கலெக்டர் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## வேளாண் அறிவியல் நிலையத்தில் 19ம் தேதி மீன் வளர்ப்பு பயிற்சி

பதிவு செய்த நாள் : ஜூலை 18,2012,02:35 IST

நாமக்கல்: "நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும் 19ம் தேதி அலங்கார மீன் பண்ணை அமைப்பது பற்றி ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடக்கிறது' என, ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை:நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும் 19ம் தேதி புறக்கடை அலங்கார மீன் பண்ணை அமைப்பது பற்றி ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடக்க உள்ளது. பயிற்சியில் அலங்கார மீன்களின் வகைகள், உணவுப் பழக்கம், இனப்பெருக்க முறைகள், மீன்களை தொட்டி மற்றும் வளர்ப்புக் குளங்களில் எவ்வாறு பராமரிப்பது உள்ளிட்ட தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. அதில் விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக

மகளிர் உள்ளிட்டோர் பங்கேற்கலாம்.விருப்பமுள்ளவர்கள் மோகனூர் சாலையில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில், 18ம் தேதிக்குள் பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். 04286-266345, 266244, 266650 என்ற ஃபோன் எண்ணிலும் தொடர்பு கொண்டு பெயர் பதிவு செய்து கொள்ளலாம்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தரமான விதை வினியோகிக்க விற்பனையாளருக்கு பயிற்சி

பதிவு செய்த நாள் : ஜூலை 18,2012,05:53 IST

தர்மபுரி: விவசாயத்துக்கு அடிப்படை மற்றும் முக்கிய இடுபொருள் விதை. பயிரின் அதிக மகசூலுக்கு தரமான விதை முக்கிய பங்கு வகிக்கிறது.

இந்த தரமான விதைகளை, விவசாயிகளுக்கு வினியோகிப்பதில், அரசு மற்றும் தனியார் விதை விற்பனையாளர்களின் பங்கு அதிகம். நல்ல இனத்தூய்மை, புறத்தூய்மை மற்றும் முளைப்புத் திறன் கொண்ட விதைகள் மட்டுமே விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்படுவதை உறுதி செய்ய விதைகள் சட்டம் அமலில் உள்ளது. தமிழகத்தில், இப்பணியை விதைச்சான்று துறையைச் சார்ந்த விதை ஆய்வுப் பிரிவு மேற்கொண்டுள்ளது.

தர்மபுரி மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குனர் மூலம் தர்மபுரி, நல்லம்பள்ளி, பாலக்கோடு, பென்னாகரம் ஒன்றியத்தைச் சேர்ந்த, 150 விதை விற்பனையாளர்களுக்கு தரமான விதை விநியோகம் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியின் போது, விதை விற்பனை குறித்த தொழில் நுட்ப புத்தகம், விதையின் தரத்தை சோதித்து உறுதிப்படுத்திக் கொள்ள உதவும் விதை முளைப்பு சோதனை தட்டு மற்றும் பயிற்சியில் பங்கு கொண்டதற்கான சான்றிதழ் வழங்கப்பட்டது.இத்தகவலை தர்மபுரி விதை ஆய்வு துணை இயக்குனர் தெரிவித்தார்.

## பசுந்தாள் தீவனம் தட்டுப்பாடு

பதிவு செய்த நாள் : ஜூலை 18,2012,05:53 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், கால்நடைகளுக்கு தேவையான பசுந்தாள் தீவனங்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கடந்த காலங்களை விட இரட்டிப்பு விலை கொடுத்தும் தீவனங்கள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.

விவசாயத்தை பிரதனமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில், விவசாயிகள் 60 சதவீதம் பேர் விவசாயத்துடன் கால்நடை வளர்ப்பு தொழில் செய்து வருகின்றனர். கடந்த 2008ம் ஆண்டு கணக்கெடுப்பு படி தர்மபுரி மாவட்டத்தில், மூன்று லட்சத்து 12 ஆயிரத்து 798 மாட்டினங்களும்,

எருமைகள், 78 ஆயிரத்து 758, செம்மறி ஆடுகள் இரண்டு லட்சத்து ஆயிரத்து 174, வெள்ளாடுகள் ஒரு லட்சத்து 84 ஆயிரத்து 477 கால்நடைகள் வளர்க்கப்பட்டு வருகிறது.மாவட்டம் முழுவதும் கால்நடை வளர்ப்போருக்கு வசதியாக, ஆறு ஆயிரத்து 209 ஹெக்டேர் நிலப்பரப்பு நிரந்தரமாக மேய்ச்சல் நிலங்களாக உள்ளன. இந்த நிலங்களில் ஆடு, மாடுகள் மேய்ச்சலுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மேய்ச்சல் நிலங்கள் இருந்த போதும், விவசாய நிலங்கள் உள்ள விவசாயிகள் கால்நடைகளுக்கு தேவையான பசுந்தாள் தீவனங்களை அதிக அளவில் தங்கள் நிலங்களில் ஒரு பகுதியை ஒதுக்கீடு செய்து, கோ 16, சோளத்தட்டை உள்ளிட்டவைகளை ஆண்டு முழுவதும் கால்நடைகளுக்கு பசுந்தாள் தீவனங்கள் கிடைக்கும் வகையில் சாகுபடி செய்துள்ளனர்.இருந்த போதும், சிறு விவசாயிகள் வெளியில் விற்பனை செய்யப்படும் பசுந்தீவனங்களை விலை கொடுத்து வாங்கி செல்கின்றனர். தர்மபுரி மாவட்டத்தை பொறுத்த வரையில் புல்லை விட ஆண்டு முழுவதும் சோள தட்டைகள் மானாவாரி நிலங்களில் பயிர் செய்து விவசாயிகள் அறுவடை செய்து கட்டுக்களாக கட்டி சந்தையில் விற்பனைக்கு கொண்டு வருவர்.

கால்நடை தீவனங்களை பொறுத்த வரையில் பல்வேறு தீவனங்கள் இன்று சந்தைக்கு விற்பனைக்கு வந்த போதும், பால் சுரக்க பசு மாடுகளுக்கு அதிக அளவில் பசுந்தாள் தீவனங்களை விவசாயிகள் கால்நடைகளுக்கு வழங்கி பால் உற்பத்தியை பெருக்க அதிக கவனம் செய்வார்கள்.மாவட்டத்தில் தொடர்ந்து பருவமழை ஏமாற்றிய நிலையில், மேய்ச்சல் நிலங்களில் கால்நடைகளுக்கு தேவையான பசுந்தாள் தீவனங்கள் முற்றிலும் குறைந்து, நீர் ஆதாரப்பகுதியில் உள்ள புல் வெளி பகுதிக்கு மேய்ச்சலுக்கு கால்நடைகளை அழைத்து செல்லும் நிலையுள்ளது.பருவ மழை தப்பியதால், கால்நடை தீவனத்துக்காக பயிர் செய்யப்பட்ட சோள தட்டைகள் வேகமாக அறுவடை செய்யப்பட்டு விற்பனைக்கு வரத்துவங்கியுள்ளது. கடந்த மாதங்களில் காலை முதல் மாலை வரையில் சோள தட்டை விற்பனை நடக்கும்.

தற்போது, மாவட்டம் முழுவதும் பசுந்தாள் தீவன தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், குறைந்த அளவு விற்பனைக்கு வரும் சோள தட்டைகள் வேகமாக விற்று தீர்ந்து விடுகிறது. அதிகாலை 6 மணிக்குள் விவசாயிகள் சந்தைக்கு சென்று சோள தட்டைகளை வாங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.கடந்த காலங்களில் ஒரு கட்டு சோள தட்டை, 20 ரூபாய் முதல் 25 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்பட்டது. தற்போது, ஒரு கட்டு, 50 ரூபாய் முதல் 60 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகிறது. கூடுதல் விலை கொடுத்தாலும், பசுந்தாள் தீவனங்கள் கிடைப்பது அரிதாகி வருவதால், பசு மாடுகள் வளர்க்கும் கால்நடை விவசாயிகள் பெரும் கலக்கத்தில் உள்ளனர்.கடந்த இரு நாட்களாக மாவட்டத்தில் பரவலாக தென்மேற்கு பருவமழை பெய்த நிலையில் நீர் ஆதாரங்கள் மற்றும் மேய்ச்சல் நிலங்களில் ஈரத்தன்மை ஏற்பட்டுள்ளதால், தொடர்ந்து மழை பெய்தால், மீண்டும் புல், பூண்டுகள் தளிர்க்கும் வாய்ப்புள்ளது. ஆனால்,

தொடர்ந்து மழை பெய்யுமா? என்பது கேள்விக்குறியாகியுள்ளதால், பசுந்தாள் தீவன தட்டுப்பாடு தொடரும் நிலையுள்ளது.

### நீர் பற்றாக்குறையால் சொட்டு நீர்ப்பாசனம் அதிகரிப்பு

பதிவு செய்த நாள் : ஜூலை 18,2012,02:51 IST

கோபிசெட்டிபாளையம்: நடப்பாண்டு துவக்கத்தில் இருந்தே தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டதால், பாசனப்பகுதி விவசாயிகள் சொட்டு நீர், தெளிப்பு நீர் பாசனத்துக்கு மாறி வருகின்றனர்.

பவானிசாகர் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளான நீலகரி, தெங்குமரஹாடா, குந்தால கெத்தை, பில்லூர், மொய்யாறு ஆகிய பகுதிகளில் மழை பொய்த்ததால், அணையின் நீர்மட்டம் வீழ்ச்சியடைந்துள்ளது.சென்றாண்டு டிசம்பர் மாதம் அணையின் நீர்மட்டம், 84 அடியாக இருந்தது. கீழ்பவானி வாய்க்கால் மற்றும் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, காலிங்கராயன் பாசனத்துக்கு தண்ணீர் திறப்பால் படிப்படியாக குறையத் துவங்கியது. நடப்பு மாதம் துவக்கத்தில் அணையின் நீர்மட்டம், 38 அடியாக இருந்தது.தடப்பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் காலிங்கராயன் வாய்க்கால் பாசனத்துக்காக, 1,150 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. தண்ணீர் பற்றாக்குறையால் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் சுழற்சி முறை அமல்படுத்தப்பட்டுள்ளது. நீர்மட்டம், 35 அடிக்கு கீழ் சென்றதால், ஜூலை, 16ம் தேதி அணை மூடப்பட்டது.

சென்ற இரண்டு ஆண்டுகளாகவே பாசன நேரத்தில், தண்ணீர் பற்றாகுறை நிலவுகிறது. இதனால், விவசாயிகள் பலரும் சொட்டு நீர்ப்பாசனத்துக்கு மாறி வருகின்றனர்.கோபி வேளாண் துறை உதவி இயக்குனர் ஆசைத்தம்பி கூறியதாவது:சொட்டு நீர்ப்பாசனம் மூலம், மூன்றில், ஒரு பங்கு தண்ணீர் மிச்சமாகும். தென்னை மரத்துக்கு, 80 முதல், 100 லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. ஏக்கருக்கு, 8,000 முதல், 10 ஆயிரம் லிட்டர் தண்ணீர் போதுமானது. சாதாரண முறையில் தண்ணீர் பாய்ச்சும் போது, 10 மடங்கு தண்ணீர் கூடுதலாக தேவைப்படும்.கரும்பு நடவுக்கு கூலியாட்கள் பற்றாக்குறை அதிகளவில் உள்ளது. கரும்பு நடவு செய்யும் போதும், தோகை உரிக்கவும், உரம் வைக்கவும் போது ஆட்கள் தேவை. சொட்டு நீர்ப்பாசனத்தில் கரும்பு நடவு செய்யும் போது, தோகை உரிக்கவும், உரம் வைக்கவும் கூலி ஆட்கள் தேவையில்லை. சொட்டு நீர் பாசனத்திலேயே உரத்தை கலந்து விடலாம்.

மஞ்சள், காய்கறி உள்ளிட்ட பயிர்களுக்கு, தெளிப்பான் முறை பயன்படுத்தப்படுகிறது. இதற்கும் மானியம் வழங்கப்படுகிறது.சொட்டு நீர்ப்பாசனத்துக்கு, 50க்கும் மேற்பட்டோர்

விண்ணப்பித்துள்ளனர். சென்ற ஆண்டை விட, நடப்பாண்டு சொட்டு நீர் பாசனத்துக்கு ஏராளமான விவசாயிகள் மாறியுள்ளனர்.இவ்வாறு அவர் கூறினார்.

## கொள்முதல் நிலையம் அமைப்பதற்கு தானமாக நிலம் தாருங்கள் : கலெக்டர்

பதிவு செய்த நாள் : ஜூலை 18,2012,03:59 IST

தஞ்சாவூர்: "தஞ்சை மாவட்டத்தில், கிராமப்பகுதிகளில், நெல் கொள்முதல் நிலையம் அமைப்பதற்கு தானமாக 0.40 சென்ட் நிலத்தை விருப்பமுள்ளவர்கள் வழங்கலாம்' என, தஞ்சை கலெக்டர் பாஸ்கரன் கேட்டுக்கொண்டுள்ளார்.
இதுகுறித்து தஞ்சை கலெக்டர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:தமிழக சட்டசபையில் 2012-13ம் நிதியாண்டுக்கான கூட்டத்தொடரில் கடந்த 2012ம் ஆண்டு ஏப்., 23ம் தேதியன்று, தஞ்சை, திருவாரூர் மற்றும் நாகை மாவட்டங்களை உள்ளடக்கிய டெல்டா மாவட்டங்களில் 50 நிரந்தர நேரடி கொள்முதல் நிலையங்கள் தலா 25 லட்சம் மதிப்பில் மொத்தம் 12.50 கோடி ரூபாயில் கட்டித்தரப்படும் என, அறிவிக்கப்பட்டது.
இதன்படி, இந்த வாய்ப்பை பயன்படுத்தி தஞ்சை மாவட்டத்தில், பொதுமக்கள் தங்கள் கிராமத்தில் நிரந்தர நேரடி நெல்கொள்முதல் நிலையம் இல்லாத, தற்காலிகமாக கொள்முதல் செயல்பட்டு வரும் கிராமப்பகுதியில், மக்கள் நலன் கருதி, தானமாக 0.40 சென்ட் விஸ்தீரணம் உள்ள காலியிடத்தை, விருப்பமுள்ளவர்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்துக்கு தர முன்வந்தால், உடனடியாக அந்த கிராமத்தில் நிரந்தர நேரடி நெல் கொள்முதல் நிலையம் கட்டித்தரப்படும் என, அறிவிக்கப்படுகிறது.எனவே, கிராம மக்கள் தங்கள் விருப்பத்தை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக தஞ்சை, கும்பகோணம், பட்டுக்கோட்டை துணைமேலாளர்களிடமோ அல்லது தஞ்சை முதுநிலை மண்டல மேலாளரிடமோ கடிதம் மூலம் அல்லது நேரில் தெரிவிக்கலாம்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## திண்டுக்கல் மாவட்டத்தில் மழை: விவசாயிகள் மழச்சி

பதிவு செய்த நாள் : ஜூலை 17,2012,23:16 IST

திண்டுக்கல் : திண்டுக்கல்லில் நேற்று கனமழை பெய்ததால், தாழ்வான பகுதிகளில் வெள்ளநீர் தேங்கியது.திண்டுக்கல் கடந்த சில நாட்களாக வெயில் வாட்டியது.
தினமும் மாலையில் மழை வருவது போல், மேக மூட்டம் தெரிவதும், பின்பு கலைந்து செல்வதுமாக இருந்தது. நேற்று மாலை 6முதல் இரவு 7 மணிவரை மழை கொட்டியது.
ஆரோக்கியமாதா தெரு, கருணாநிதி காலனி, இந்திரா காலனி, திருமலைசாமிபுரம்,

போடிநாயக்கன்பட்டி, காமராஜபுரம் பகுதிகளில் வெள்ளநீர் புகுந்தது. மாணவர்கள் பாதிக்கப்பட்டனர்.
இடி: கொடைக்கானலில் நேற்று, பலத்த காற்றுடன் கனமழை கொட்டியது.
பல இடங்களில், இரண்டு மணிநேரத்திற்கு மேலாக மழை நீடித்தது. அப்சர்வேட்டரி பகுதியில், 10 மி.மீ., மழை பதிவானது. வீட்டு உபயோக பொருட்கள், கம்ப்யூட்டர், மின்னணு சாதனங்கள் பழுதாகின.
டெலிபோன், இன்டர்நெட் சேவைகள் பாதிப்படைந்தன. விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கொடைக்கானல் வெள்ளி, பியர்சோலா நீர்வீழ்ச்சிகளில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. பழநியில் லேசான மழை பெய்தது.

**மானியத்தில் பயறு வகை**

பதிவு செய்த நாள் : ஜூலை 17,2012,23:24 IST

வருஷநாடு : கடமலைக்குண்டு, மயிலாடும்பாறை, வருஷநாடு, கோம்பைத்தொழு, சிங்கராஜபுரம், கண்டமனூர், ராஜேந்திரநகர், பாலூத்து, குமணந்தொழு, வாலிப்பாறை, தும்மக்குண்டு, சிங்கராஜபுரம், முருக்கோடை, மூலக்கடை,முத்தலாம்பாறை, உட்பட பல கிராமங்களில் மானாவாரி விவசாயம் அதிகமாக உள்ளது.
விவசாயத் துறை மூலம் தட்டான்பயறு 12 சதவீதம்,,பாசிப்பயறு 30 சதவீதம்,நுண்ணுயிர் உரம் மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது.தேவைப்படும் விவசாயிகள் விவசாயத் துறை அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

**கண்ணீரை வரவழைக்கும் வெங்காய விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : ஜூலை 17,2012,23:17 IST

ஆண்டிபட்டி : வெங்காயத்திற்கு திடீரென ஏற்பட்டுள்ள விலை உயர்வால் பொதுமக்கள் கவலை அடைந்துள்ளனர்.
ஆண்டிபட்டி பகுதியில் சித்தயகவுண்டன்பட்டி, சொக்கத்தேவன்பட்டி, சித்தார்பட்டி, கணேசபுரம், ராமலிங்காபுரம், சுந்தரராஜபுரம், அழகாபுரி, ஆவாரம்பட்டி உட்பட பல கிராமங்களில் வெங்காய சாகுபடி நடந்து வருகிறது. கடந்த மூன்று மாதத்திற்கு முன் ஆண்டிபட்டி பகுதிகளில் வெங்காய விளைச்சல் அதிகமாக இருந்தது.
ஆண்டிபட்டியில் இருந்து தினமும் 20க்கும் மேற்பட்ட லாரிகளில், வெங்காயம் வெளியூர்களுக்கு

அனுப்பப்பட்டது.
அதிகப்படியான உற்பத்தியால் கிலோ 5 முதல் 6 ரூபாய்க்கு விற்கப்பட் டது. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் புதிதாக வெங்காயம் நடவு செய்வதை தவிர்த்து விட்டனர். குறைவான சாகுபடியால் வெங்காய விலை, கிலோ 25 முதல் 30 ரூபாய் வரை உயர்ந்து விட்டது. தற்போது வெங்காயம் அறுவடை செய்து வரும் விவசாயிகளுக்கு, நல்ல லாபம் கிடைத்து வருவதால் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அதேநேரம் விலை உயர்வால் பொதுமக்கள் கவலை அடைந்துள்ளனர்.

### உப்பு விலை சரிவால் விற்பனை பாதிப்பு: டன் கணக்கில் தேக்கம்

பதிவு செய்த நாள் : ஜூலை 17,2012,21:01 IST

கீழக்கரை : உப்பு விலையில் ஏற்பட்ட சரிவால், ராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணி பகுதியில் ஆயிரக்கணக்கான டன் உப்பு தேங்கி உள்ளது.
திருப்புல்லாணி, காஞ்சிரங்குடி பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் உப்பளங்கள் உள்ளன. நடப்பாண்டில் கடும் வெயில் மற்றும் பலத்த காற்று காரணமாக உப்பு உற்பத்தி அதிகமாக இருந்தும், போதிய விலை இல்லை. உற்பத்தி செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான டன் உப்பு குவித்து வைக்கப்பட்டுள்ளது.
உப்பள மேற்பார்வையாளர் வேல்ச்சாமி கூறியதாவது: கடந்தாண்டு டன் ரூ.900 வரை விற்பனையான உப்பு, தற்போது ரூ.700க்கு கொள்முதல் செய்ய முன் வருகின்றனர். மின் கட்டணம் உயர்வு, தொழிலாளர் சம்பளம் அதிகரிப்பு உட்பட பல கூடுதல் செலவுகளால் பாதிக்கப்பட்டுள்ளோம். மழை காலத்தில் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது.
உப்பளத்திற்கு சலுகை கட்டணத்தில் மின்சாரம் உள்ளிட்ட உதவிகளை அளித்து "கரைந்து' வரும் உப்பளத் தொழிலையும், அதை நம்பியுள்ளோரை மத்திய, மாநில அரசுகள் காப்பாற்ற வேண்டும், என்றார்.

### குற்றாலம் பகுதியில் விவசாய பணிகள் தீவிரம்

பதிவு செய்த நாள் : ஜூலை 18,2012,02:44 IST

குற்றாலம்:குற்றாலம் மற்றும் அதன்சுற்று வட்டார பகுதிகளில் விவசாய பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது.ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் முதல் தேதியில் குற்றாலம் பகுதியில் கார்

சாகுபடி விவசாய பணிகள் மேற்கொள்ளப்படுவது வழக்கம். ஆனால் நடப்பு ஆண்டில் ஜூன் மாதம் பெய்யவேண்டிய தென்மேற்கு பருவ மழை பெய்யாமல் கண்ணாமூச்சி காட்டிவந்ததால் இப்பகுதி வாழ் விவசாயிகள் விவசாய பணிகளை மேற்கொள்ள முடியாமல் ஆழ்ந்த கவலையடைந்து வந்தனர்.

இந்நிலையில் கடந்த ஜூன் மாதம் 7ம் தேதியும் அதன் பிறகு 17ம் தேதியும் சாரல் மழை பெய்ததின் அடிப்படையிலும் ஏரி, குளம், அணை பகுதிகளில் உரிய தண்ணீர் வரத்து இன்றி காணப்பட்டதால் கார்சாகுபடி விவசாய பணிகளை மேற்கொள்வதா? வேண்டாமா? என்ற குழப்பிய நிலையில் இருந்துவந்த நிலையில் கேரள வனப்பகுதியில் பெய்து வரும் சாரல் மழை காரணமாக மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியை ஒட்டிய பகுதியில் ஓரளவு விவசாயத்திற்கு தேவையான நீர்வரத்து வந்த நிலையில் தற்போது கார்சாகுபடி விவசாய பணியான தண்ணீர் பாய்ச்சுதல், தொழி அடித்தல் போன்ற பணிகளை தாமதமாக மேற்கொண்டுள்ளனர். ஒருசில பகுதிகளில் விதை விதைத்தல், நாற்று பாவும் பணியையும் மேற்கொண்டுள்ளனர்.

## நாளை விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்

பதிவு செய்த நாள் : ஜூலை 18,2012,02:02 IST

தூத்துக்குடி:தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நாளை நடக்கிறது. இதில் விவசாய சங்க நிர்வாகிகள் திரளாக கலந்து கொள்ளுமாறு கலெக்டர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.ஒவ்வொரு மாதமும் 3வது வியாழக்கிழமை விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடந்து வருகிறது.

இம் மாதத்திற்கான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாளை (19ம் தேதி) காலை 11 மணிக்கு கலெக்டர் அலுவலகம் சங்கு கூடத்தில் கலெக்டர் ஆஷீஷ்குமார் தலைமையில் நடக்கிறது. கூட்டத்தில் விவசாய சங்க நிர்வாகிகள், பாசன சங்க பிரதிநிதிகள் திரளாக பங்கேற்குமாறு கலெக்டர் வேண்டுகோள் விடுத்துள்ளார். குடிநீர் பிரச்னை, விவசாயத்திற்கு தண்ணீர் வழங்காமல் இருந்தல், தனியார் தொழிற்சாலைகளுக்கு தண்ணீர் வழங்குதல் போன்ற சில பிரச்னைகளை எழுப்ப விவசாயிகள் முடிவு செய்திருப்பதாக கூறப்படுகிறது. இதனால் கூட்டத்தில் கடும் பரபரப்பு காணப்படும் என்று விவசாய சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

---

தினகரன்

## துவரையை தாக்கும் காய்புழுவை கட்டுப்படுத்த ஆலோசனை

பதிவு செய்த நேரம்:2012-07-17 11:47:10

குஜிலியம்பாறை, : குஜிலியம்பாறை பகுதியில் மானாவாரியாக பயிரிடப்பட்ட துவரை பயிரை தாக்கும் காய்புழுவை கட்டுப்படுத்த வேளாண்.துறையினர் ஆலோசனை வழங்கியுள்ளனர். குஜிலியம்பாறை ஒன்றியத்தில், தங்கள் நிலங்களில் மானாவாரி பயிர் வகைகளை விவசாயிகள் பயிரிடுட்டுள்ளனர். ஒன்றியத்திலுள்ள குஜிலியம்பாறை, சின்னுலுப்பை, ஆர்.கோம்பை, லந்தக்கோட்டை, கோட்டாநத்தம், டி.கூடலூர், மல்லப்புரம், உல்லியக்கோட்டை மற்றும் சுற்றுப்புற கிராம பகுதிகளில் பரவலாக துவரை பயிரை விவசாயிகள் சாகுபடி செய்துள்ளனர். பயிரிடப்பட்டுள்ள துவரை பயிர்களில் காய்புழுவின் தாக்கம் அதிகரித்துள்ளதால், மகசூல் விளைச்சலில் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

இதனை தவிர்த்து காய்புழுக்களை கட்டுப்படுத்த ஒரு ஏக்கருக்கு எண்டோசல்பான் 400 மி.லி. அல்லது மோனோகுரோட்டோபாஸ் 200 மி.லி. அல்லது என்.பி.வைரஸ் 250மி.லி. எல்.ஈ. தெளித்து கட்டுப்படுத்தலாம்.

இவ்வாறு தெளிப்பதன் மூலம் காய்புழுக்கள் முற்றிலும் அழிந்து பயிர் நன்கு வளர்ச்சி பெற்று, துவரை பயிர் மகசூல் பாதிப்பின்றி அதிக விளைச்சல் விளைய வாய்ப்பு உள்ளது. இத்தொழில் நுட்பத்தை விவசாயிகள் பயன்படுத்தி அதிக மகசூல் பெறலாம் என குஜிலியம்பாறை வேளாண்மை துறையினர் தெரிவித்துள்ளனர்.

## நாற்று முறையில் துவரை நடவு 2 கிராமங்கள் தேர்வு

பதிவு செய்த நேரம்:2012-07-18 10:13:55

கடலூர், : நாற்று முறையில் துவரை நடவு செய்ய 2 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து கடலூர் வேளாண்மை உதவி இயக்குனர் ஜெயந்தி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் பயறு உற்பத்தி அபிவிருத்தி திட்டமான துவரையில் நாற்று விட்டு நடவு செய்யும் முறை நடப்பு நிதியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி கடலூர் வட்டாரத்தில் 600 எக்டேரில் துவரை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

பயறு வகை சாகுபடியில் உற்பத்தியை பெருக்குவதற்காக நவீன தொழில்நுட்பமான நாற்று விட்டு நடவு செய்யும் முறை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த முறையில் ஒரு

எக்டேருக்கு நடவு செய்ய தேவையான 6,250 நாற்றுகளை பாலிதீன் பைகளில் உற்பத்தி செய்து நடவு செய்ய வேண்டும். இதற்கு தேவையான விதையளவு 2.5 கிலோ.

நடப்பாண்டில் இந்த திட்டம் செயல்படுத்த பாப்பையம்பாடி, வடவம்பாடி வருவாய் கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. 15 எக்டேர் செயல் விளக்கத்திடல்கள் அமைக்க விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு நாற்று விடும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வேளாண் உதவி இயக்குநர் ஜெயந்தி தெரிவித்துள்ளார்.